**இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின்2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று,உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர்31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,அதிகாரசபையின்தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
அதிகாரசபையின்நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின்வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை / நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின்ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| இணங்காமையுடன்தொடர்புடைய உரிய நியமம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அமைச்சின் மானியத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு ரூபா 183,691,999 பெறுமதியில் மூலதனமாக்கப்பட்டிருந்த ரெகவ கிராப்சிடி செயற்திட்டம் நீண்ட கால முதலீடாக இனங்காணப்பட்டு நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும்,இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இலுள்ள 69 | இது நிலையான சொத்தாக அன்றி Other Non-Current Assetsஎன ஐந்தொகையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக 2020 ஆம் ஆண்டில் அரச மற்றும் தனியார் பங்குடையின் கீழ் முதலீட்டாளர் ஒருவர் தெரிவுசெய்யப்பட | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இலுள்ள 69 ஆம் பிரிவின் படி சொத்துக்களை காலத் தேய்மானம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆம் பிரிவின் படி அந்தச் செயற்திட்டத்தின் கீழுள்ள சொத்துக்களின் பயனுள்ள வாழ்க் கைக் காலத்திற்கமைய காலத் தேய்மானம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டியிருந்த போதிலும், அதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய,இது தொடர்பில் கணக்குகளில் சீராக்கம் செய்ய முடியாது ள்ளதுடன் அது கணக்குக ளிற்கான குறிப்பாக வெளிப்ப டுத்தப்பட்டுள்ளது. | |
| **(ஆ)** இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இலுள்ள 47 ஆம் பிரிவின் படி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நியாயப் பெறுமதியானது அதன் முன்கொண்டு செல்லும் பெறுமதியிலிருந்து பொருண்மையாக வேறுபடுமிடத்து, 03 ஆண்டுகளிற்கு அல்லது 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை அவை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 1998 ஆம் ஆண்டின் பின்னர் அனைத்து நிலையான சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் ரூபா **1,702,306,274** கிரயமுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களினதும் ரூபா **894,757,806** கிரயமுடைய இனவிருத்தி நிலையத்திலுள்ள சொத்துக்களினதும் நியாயப் பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அதிகாரசபைக்குச் சொந்தமான தற்போது அதிகாரசபையால் பயன்படுத்தப்படுகின்ற **109.7597** ஹெக்டயர் விஸ்தீரணமுடைய 14 காணித் துண்டுகளின் பெறுமதி விலை மதிக்கப்பட்டு கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்த மீள் மதிப்பீட்டின் போதும் அத்திணைக்களம் உரிய விதத்தில் செயற்பட்டிருக்கவில்லை. அதி காரசபையின் கைவசமுள்ள சொத்துக்களின் எண்ணிக்கை யின் படி இந்தப் பணி மிகவும் சிக்கலானதாக காணப்படுகின்ற போதிலும், இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு கருத்திற்கொள்ளப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இலுள்ள 47 ஆம் பிரிவின் படி ஆதனங்களின் பெறு மதிகளை முடிந்த ளவு மீள்மதிப்பீடு செய்து கணக்கு களிற்கு எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையால் பேணப்பட்டு வருகின்ற உயிரியல் இருப்புக்களை பெறுமதியிடுதல் கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படா திருந்ததுடன், 18 நிலையங்களில் ஐந்தொகைத் திகதியில் காணப்பட்ட | முன்னைய ஆண்டுகளில் கணக்காய்வில் சுட்டிக் காண்பிக் கப்பட்டவாறு இந்த ஆண்டிற் கான இருப்புக் கொடுக்கல் வாங்கல்கள் பதிவுசெய்யப்பட்டு நிதிக் | உயிரியல் இருப்புக் களை பெறுமதியிடு கின்ற கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் |

| | | |
|---|---|---|
| உயிரியல் இருப்புக்களை விலை மதிக்காது அவற்றின் கிரயமான ரூபா 37,781,566 பெறுமதியில் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ளது. மேலும் இது தொடர்பான கணக்கீட்டுப் பதிவு களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | வெளி ப்படுத்தப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க ப்பட்டிருந்த காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் மூலதனச் செலுத்துகைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 108,697,995 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்றில் தெளிவாக Capitalized Assets and Other Projects – Ministryஎன குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியானது நிர்மாணத்துடன் மாத்திரம் சம்பந்தப்பட்ட தொகையன்றி அதில் அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செயற்திட்டங்களினதும் செலவினம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் அதிகாரசபையின் மூலதன ஏற்பாடுகள் எதுவும் உள்ளடக்கப்படவில்லை. | மூலதனச் செலுத்து கைகளிற்காக பயன படுத்தப்பட்டிருந்த தொகையை சீராக்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டில் வெலிகந்த இனவிருத்தி நிலையத்தை நிர்மா ணிப்பதற்காக ஒப்பந்த நிறுவனத் திற்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,060,518 தொகையை குறித்த ஒப்பந்தக் கணக்கிற்கு வரவு வைக்காது ஏனைய கடன்கொடு த்தோர் மீதியிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான நடைபெற்றுவரும் வேலைகளின் பெறுமதி மற்றும் கடன்கொடுத் தோர் மீதி என்பன அத்தொகை யால் நிதிக் கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | ஒப்பந்தங்கள் தொடர்பில் மேற்கொள் ளப்படுகின்ற கொடுப்பனவுகள் அமைச் சின் செலவின விடயங்களிற்காக திறக்கப்பட்டுள்ள கணக்கிலேயே பதியப்படுகின்றன. பின்னர் பட்டோலை களின் ஊடாக மூலதனமாக்கப்ப டுகின்றது. இது சரியாக பதியப்பட்ட விடயமாகும். | நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோர் மீதி சரியாக சீராக் கப்படுதல் வேண்டும். |
| (இ) முன்னைய ஆண்டில் செலுத்த வேண்டிய ஒப்பந்தக் கணக்கில் முன்னெடுத்து வரப்பட்டிருந்த மீதியை திருத்தும் வகையில் ரூபா 5,969,686 தொகை செலுத்த வேண்டிய ஒப்பந்தக் கணக்கி லிருந்து அகற்றப்பட்டு மூலதன மானியக் கணக்கிற்கு மாற்றப்பட்டி ருந்தமையால் மூலதன மானியக் கணக்கின் மீதி அதிகரித்திருந் ததுடன், அது குறித்த சீராக்கல் விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, நீரியல் உயிரின | முன்னைய ஆண்டில் நிர்மாணங்கள் பூரணப்படுத்தப்பட்டு மூலதனமாக்கப் பட வேண்டியிருந்த சில சொத்துக்கள் 2019 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட வேண்டியிருந்த பட்டியல்களாக இனங்காணப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் அந்த பட்டியல் கொடுப்பனவுகள் வேறு கணக் கொன்றில் பதியப்பட்டிருந்தமை திருத்தப்படுதலே இதுவாகும். இது சரியான கணக்கீட்டுப் பதிவாகும். | மூலதன மானியக் கணக்கிற்கான சீராக் கல்களுடன் தொடர் புடைய விபரங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வளர்ப்பு அபிவிருத்திச் செலவுக் கணக்கிற்கு பதிவழிக்கப்பட்டிருந்த ரூபா 4,184,416 முன்னைய ஆண்டி ற்காக செலுத்த வேண்டிய ஒப்பந்தப் பட்டியல் சீராக்கல் தொடர்பான விபரங்களும் கணக் காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | | |
| (ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 7,853,430 கூட்டுத்தொகையான 06 செலுத்த வேண்டிய மீதிகள் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரண மாக மீளாய்வாண்டிற்கான நடை முறைப் பொறுப்புகள் அத் தொகையால் நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | மீண்டுவரும் செலவினங்களை செலுத்த வேண்டியதாக காண்பிக்க முடியுமான போதிலும், மூலதனச் செலவினங்களை அவ்வாறு பதிவு செய்வது இலகுவான காரியமல்ல. ஏனெனில் செலுத்த வேண்டியவையாக இனங்காணப்பட்ட போதிலும் தொடர்ந்து வரும் ஆண்டில் அவற்றை குறித்த செலுத்த வேண்டிய கணக்கிலிருந்து அல்லாது அதற்குரிய செலவினக் கணக்கிலிருந்தே செலுத்த வேண்டி ஏற்படுவதனாலாகும். இது கடந்த ஆண்டின் இறுதிக் காலத்தில் இடம்பெற்ற சில கொடுக்கல் வாங்கல்களாக இருப்பதனாலும் இந்த இயந்திரங்கள் அந்த ஆண்டில் பயன்படுத்தப்படாமையாலும் நிதிக் கூற்றுக்களிற்கு ஏற்படுகின்ற தாக்கம் பொருண்மையாக காணப்படவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகள் நிதிக் கூற்று க்களில் பொறுப்புக் களாக உள்ளடக்க ப்பட வேண்டும். |
| (உ) மீனவர்களின் நலனோம்பல் நடவடிக்கைகளிற்காக அமைச்சின் நிதி ஏற்பாட்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்பாடு நிதியத்தில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட ரூபா 64,576,327 தொகையினை செயற்பாடுடைய நிதியமொன்றாக நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்குப் பதிலாக மீளச் செலுத்த வேண்டுமென்ற எவ்விதக் கடப்பாடும் காணப்படாத போதிலும் செலுத்த வேண்டிய மீதியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான நடைமுறைப் பொறுப்புக்கள் அத்தொகையால் நிதிக் கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | நிதியமொன்று வரவு மீதியாகக் காணப்பட வேண்டியதுடன் இது அறவிடப்பட்ட தொகைகள் பதிவு செய்யப்பட்ட கணக்கொன்றாக காணப் படுகின்றமையாலும் இக் கணக்கில் செலவு மீதி காணப்படுகின்றமை யாலும் ஏனைய செலுத்த வேண்டிய வைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | செயற்பாடுடைய நிதி யமொன்றாக நிதிக் கூற்றுக்களில் காண் பிக்கப்படுதல் வேண் டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) அதிகாரசபையால் சமர்ப்பிக்கப்பட்ட காணி விலைமதிப்பு அறிக்கை யின் படி மொத்த விலைமதிப்புப் பெறுமதி ரூபா 23,271,000 ஆன 04 காணிகளின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அதிகாரசபை குத்தகை அடிப்படையில் பெற்று தற்போது பயன்படுத்தி வருகின்ற மன்னார் மாவட்டத்திலுள்ள ஓலைத்தொடுவாய் இலுள்ள கடல் அட்டை இனவிருத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள ரூபா 800,000 விலை மதிப்புடைய 30 ஆண்டு குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள 01 ஏக்கர் காணி குத்தகை ஆதனமாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகள் தனித்தனியாக தரப்பட்டுள்ள நிலமைகளில் கணக்கீட்டின் போது பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய பெறுமதிகளை சரியாக இனங்காணப்பட வேண்டியிருப்பதனால் இவை கணக்கீடு செய்யப்பட்டிருக் கவில்லை. | காணியின் விலை மதிப்புப் பெறுமதி மற்றும் குத்தகை ஆதனம் என்பன நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (எ) நடுவர் தீர்ப்புக்காக கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த ஒப்பந்த வேலை களின் தாமதக் கட்டண நட்டம் ஒப்பந்தக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் ரூபா 14,173,684 ஆல் ஒப்பந்த வேலை கிரயம் அதிகரித்துக் காட்டப்பட்டி ருந்தது. | இந்தப் பெறுமதியை உறுதியாக இனங்கண்டு குறித்த ஒப்பந்தக் கம்பனியிடமிருந்து அறவிட்டுக் கொள்ளுமாறு வழங்கப்பட்டிருந்த ஆலோசனைக்கு அமைய அறவிடப்பட்டிருந்தமையாலும் அந்த தொகை யினை உறுதிப்பட வருமானமாக இனங்காண்பதற்கு போதியளவு காலம் காணப்படாமையாலும் இது செலுத்தப்பட வேண்டிய மீதியாக இனங்காணப்பட்டது. இது ஒதுக்கீடு அல்ல என்பதுடன் அறவிடப்பட்ட தொகை தனிப்பட்ட கணக்கொன்றில் தற்காலிகமாக பதியப்பட்டுள்ளது. | நடுவர் தீர்ப்புக்காக விடுக்கப்பட்டுள்ளமை யால் தாமத கட்டண நட்டம்,ஒப்பந்தக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட முடி யாது. |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) மூலதன மானியத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட எழில்மிகு இறங்குதுறை செயற்திட்ட சொத்துக்களிலிருந்து அகற்றப் பட்டு மீனவர் | 27,659,046 | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம், அமைச்சரவை பத்திரம், மீனவர் சங்கங்களிற்கு பொறுப்பளிப்பு ஆவணங்கள் | இந்தச் செயற் திட்டத்தின் கீழ் மீனவர் சங்கங் களிற்கு எழுத்து ருவில் கையளிக் கப்பட்ட கடிதங் கள் குறித்த நாளேட்டுப் பதிவுகளுடன் | எழில்மிகு இறங்கு துறை செயற்திட் டத்தின் சொத்துக் கள் பதிவழிக்கப் பட்மைக்கான எவ் விதச் சான்றுகளும் கணக்காய்விற்கு கையளிக்கப்படவி |

| | | | | |
|---|---|---|---|---|
| சங்கங்களிற்கு கையளிக்கப்பட்ட சொத்துக்கள் | | | இணைக்கப்பட்டு ள்ளன. | ல்லை. எனவே சொத்துக்கள் பதிவழிக்கப்பட்மை க்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) கடன்பட்டோர் மீதி | 19,292,045 | 28 கடன்பட்டோர் மீதிகளிற்கான உறுதிப் படுத்தல்கள் | எமது கடன்பட் டோர்கள் சராசரி மீனவர்களாக இருப்பதனால் அவர்களிற்கு இது தொடர்பில் அறிவு இல்லா மையால் பதில் அளித்திருக்கவி ல்லை. | பொருண்மையான கடன்பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு வழிமுறையொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவை | | | |
| i) 371 (இ) | விசேட மற்றும் எரிபொருள் முற்பணமாக பெற்றுக் கொண்டிருந்த ரூபா 463,589 தொகை தீர்க்கப்படாதிருந்த துடன், அதில் ரூபா 98,640 தொகை 02 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக காணப்ப ட்டமை அவதானிக்கப்பட்டது. | தீர்க்கப்படாதுள்ள அனைத்து முற்பணங் களையும் 2021 ஆம் ஆண்டில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணத் தின் பிரகாரம் எடுத்தல் வேண் டும். |
| ii) 395 (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,649,263 மீதியொன்று காணப்பட்ட நடைமுறைக் கணக்கிற்காக 2020 ஏப்ரல் மாதத்தின் பின்னர் வங்கிக் கணக்கிண க்கக் கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பி க்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வங்கிக் கணக் கிற்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தற்போது தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத் தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண் டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 1998 இன் 53 ஆம் இலக்க 1998 நவம்பர் 27 ஆந் திகதிய இலங்கை நீரியல் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 30(3) ஆம் பிரிவு | தனியார் அரசாங்க பங்குடமை செயற்திட்டம் ஒன்றாக அம்பலந்தொட கிரேப் சிடி செயற்திட்டத்திற்கு நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்திற்காக அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள 89 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ள காணி சட்டத்தின் பிரகாரம் இது வரை கையேற்கப்பட்டிருக்க வில்லை. | இந்தக் காணி கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சுக்கு அம்பலந்தொட பிரதேச செயலாளரின் DSAM/LMN/07/03/272ஆம் இலக்க 2017 யூன் 16 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் செயற்திட்டத்தை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. | சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் படி அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணியை முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 02/2017 ஆம் இலக்க 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய அரசாங்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சினால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள 03 டிரக்டர்கள் மற்றும் 05 சைக்கில்களை பதிவுசெய்து அவற்றின் உரிமை அதிகாரசபைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த 03 டிரக்டர்கள் மற்றும் 05 சைக்கில்களின் உரித்தினை கையேற்பதற்காக அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த வாகனங்கள் 10 ஆண்டுகளிற்கும் மேல் பழமையானதாக இருப்பதுடன் செயற்திட்டத்தினால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகையால், இந்த வாகனங்களின் ஆவணங்களை கண்டுபிடிப்பதற்கு காலம் தேவைப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) 05/2020 ஆம் இலக்க 2020 ஒக்தோபர் 02 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | ஓடக்கூடிய நிலையில் இல்லாத 04 குழாம் வாகனங்களை கைதவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 04 வாகனங்களில் இரண்டு வாகனங்கள் திருத்தப்பட்டுள்ளன. ஏனைய இரண்டு வாகனங்களிற்கான உதிரிப்பாகங்கள் இல்லாமை காரணமாக திருத்தியமைத்தல் தாமதமடைந்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2.8.4 மற்றும் 2.14.1 ஆம் பிரிவுகள் | திணைக்கள கொள்வனவு அதிகார எல்லையின் கீழ் (Department Procurement Committee)மேற்கொள்ளப்படுகின்ற கொள்வனவுகளிற்காக விடயம் சார் நிபுணத்துவ அறிவுடைய உறுப்பினர் ஒருவர் உள்ளடங்கலாக 03 உறுப்பினர்களை உள்ளடக்கிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையின் லொறி வாகனத்தை திருத்துவதற்காக ரூபா 822,000 செலவிடப்பட்டிருந்ததுடன் அதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன் பரிந்துரை பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, இந்த திருத்த வேலைக்காக 02 கூறுவிலைகள் மாத்திரம் பெறப்பட்டு தனியார் நிறுவனமொன்றுக்கு அத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக அதிகாரசபையின் தொழில்சார் மற்றும் கொள்வனவு நடைமுறை குறித்த அனுபவமுள்ள உதவிப் பணிப்பாளரும் போக்குவரத்து முகாமைத்துவ உதவியாளரும் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன்,Shopping Procedureவிலை முறையின் கீழ் கோரப்பட்ட கூறுவிலைகள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் இது இடம்பெற்றுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். Shopping Procedureகொள்வனவு முறையின் கீழ் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறவேண்டியதில்லை<br><br>இந்த லொறிக்குத் தேவையான Crew cab,மற்றும்rear Trailerஇனை கொள்வனவு செய்தல் கொரோனா நோய்த்தொற்று காரணமாக முடியாது போயிருந்தது. உதிரிப் பாகங்களை விற்பனை செய்யும் நிறுவனம் கொரோனா காரணமாக மூடப்பட்டிருந்தமையால் 02 கூறுவிலைகள் மாத்திரம் கிடைக்கப்பெற்று மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கி | கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் உரிய பிரிவுகளின் படி அதிகாரசபை செயற்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ன்றேன். இருப்பினும், இந்த லொறி தற் போது செவனபிடிய நிலையத்தின் போக்கு வரத்து நடவடிக்கை களில் ஈடுபடுத்தப்பட்டு ள்ளது. | |
| (ஊ) 2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் வாகன போக்குவரத்து (திருத்திய) சட்டத்தின் 5(அ) ஆம் பிரிவு | மேற்படி லொறி புதுப்பிக்கப் பட்டு நீர் பவுசராக மாற்றப்பட்டிருந்த போதிலும், அந்த மாற்றத்திற்காக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் அனுமதி பெறப்பட்டிரு க்கவில்லை. | Shopping Procedureஇன் கீழ் தலைவரின் அங்கீகாரத்தின் மீது இது இடம்பெற்றிருந்த துடன், தேவைப்படின் எதிர்காலத்தில் இதற் காக அமைச்சு செய லாளரின் அங்கீகாரத் தைப் பெற்று கொள்வ னவு நடிவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை தெரிவித் துக் கொள்கின்றேன். | 2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் வாகன போக்கு வரத்து (திருத் திய) சட்டத்தின் 5(அ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபை செயற்படுதல் வேண்டும். |
| (எ) 2/2015 ஆம் இலக்க 2015 யூலை 10 ஆந் திகதிய வாகனங்கள் கைதவிர்ப்புச் சுற்றறி க்கை | அதிகாரசபைக்குச் சொந்தமான கெப் வாகனமொன்று 02 ஆண்டுகளாக பயன்படுத்தாது வைத்திருக்கப்பட்ட பின்னர் கேள்வி கோரல் மூலம் விற்பனை செய்யும் நடவடிக்கைகள் தாமதமடை ந்தமையால் விரைவாக பயன்படுத்த முடியாத நிலைக்கு உட்பட்டிருந்தது. | அப்போது நிலவிய கொரோனா நிலமை காரணமாக அரசாங்க த்தினால் கொள்கை ரீதியாக மோட்டார் வாகனங்களின் இறக் குமதி நிறுத்தப்பட் டமை மற்றும் அதிகார சபையில் காணப்படு கின்ற வாகனப் பற்றா க்குறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மீண்டும் இந்த வாகன த்தை திருத்தியமை த்து பயன்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி வாகனங்கள் கைதவிர்க்கப்படு தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 43.169,337 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நெரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்கறை ரூபா

55.413,960ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 12.244,623முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருமானம் ரூபா 12,259,911ஆல் அதிகரித்தமை மற்றும் விநியோகச் செலவினம் ரூபா 11,188,504ஆல் குறைவடைந்திருந்தமையே நிதி விளைவுகளில் இந்த முன்னேற்றத்துக்கு பிரதான காரணமாகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உவர் நீர் குளங்களில் இறால் வளர்ப்புக்காக புதிய உரிமங்கள் வழங்குதல்2019 உடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 22 உரிமங்கள் அல்லது 62 சதவீதத்தால் குறைந்திருந் ததுடன் பழைய உரிமங்களை புதுப்பித்தல் 2019 உடன் ஒப்பிடும்போது 41 சதவீதத்தால் குறைந்திருந்தது. இந்த நிலைமையை மீளாய்வு செய்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரசபை செயற்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயற்திட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் நீர்த்தேக்கங்களில் மீன் வளர்ப்பும் குறைவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | **உவர் நீர் குளங்களில் இறால் வளர்ப்பு** 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் வரை வகுப்பு“இ” இன் ii, வகுப்பு “அ” மற்றும் “ஈ” இன் அ தொடர்பில் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை மாத்திரமே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் ஆகஸ்ட் முதல் டிசம்பர் இறுதி வரை 188 உரிமங்கள் உவர் நீர் இறால் வளர்ப்புக்காக வழங்கப்பட்டுள்ளன. அதன்படி,2020 ஆம் ஆண்டிற்காக வகுப்பு “இ” இன் ii மற்றும் “அ”,“ஈ” வகுப்புகளிற்காக மொத்தம் 310 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், நீரியல் உயிரின வளர்ப்பு முகாமைத்துவப் பிரிவு 2019 இல் 35 புதிய உரிமங்களையும் 506 புதுப்பிப்புகளையும்,2020 இல் 13 புதிய உரிமங்களையும்297 புதுப்பிப்புகளையும் வழங்கியுள்ளது. | புதிய உரிமங் களை வழங்குவ தற்கு தேவை யான நடவடிக் கைகளை முகாமைத்துவம் மேற்கொள்தல் வேண்டும். |
| (ஆ) 2011 திசெம்பர் 13 ஆந் திகதிய 1736/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் IIஆம் பட்டோலையின் படி,வழங்கப்படுகின்ற உரிமத்தின் முதலாவது 06 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர்,சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். இது | தற்போது உரிய அனுமதி களை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | சட்டத்தில் குறிப்பி டப்பட்டுள்ள கால எல்லைக்குள் குறித்த சுற்றாடல் பாதுகாப்பு அனும திப் பத்திரம் பெற்றுக் கொள்ள ப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொடர்பில் கணக்காய்வில் பரிசோதிக்கப்பட்ட 16 கோவைகளில் எந்தவொரு இறால் வளர்ப்பாளரும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பித்திருக்காமை அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையால் இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (இ)மட்டக்களப்பில் துடுப்பு மீன் (Fin Fish) வளர்ப்பு இனவிருத்தி நிலையத்தை நிர்மாணிப்பதன் மூலம் வருடாந்தம்5,000,000 மீன்களை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்ததுடன்அந்த வருடாந்த உற்பத்தி இலக்கு 2019 மற்றும் 2020 இல் முறையே100,000 மற்றும் 200,000 ஆக குறைக்கப்பட்டது. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி நிலையத்தின் உண்மையான வருடாந்த மீன் உற்பத்தி முறையே 88,050 மற்றும் 57,700 ஆக இருந்ததுடன், இது இலக்கிடப்பட்ட மீன் உற்பத்தியில் முறையே 88 சதவீதம் மற்றும் 29 சதவீதம் ஆகும். மேலும்,2019 ஐ விட 2020 இல் 59 சதவீதம் குறைவொன்று அவதரின்க்கப்பட்டது. இருப்பினும், அப்பகுதியில் வறுமையை போக்குவதற்காக தொடங்கப்பட்டிருந்த இச்செயற்திட்டத்தின் உற்பத்தி இலக்கை எட்டுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மட்டக்களப்பு மீன்வளர்ப்பு இனவிருத்தி நிலைய நிர்மாணித்தல் நடவடிக்கைகள் 2017ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நிறைவடைந்து 15 மாதங்களுக்குப் பின்னர்,மீன் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்ட போதிலும், ஆரம்ப நிர்மாணப் பணிகளை முடிப்பதற்கு முன்னர், இனவிருத்தி நிலையம் கையளிக்கப்பட்டிருந்தமை காரணமாக இனவிருத்தி நிலையத்தை உற்பத்தி செய்யும் நிலைக்குக் கொண்டுவருவதற்குத் தேவையான பணிகளை முடிக்க சிறிது கால அவகாசம் தேவைப்பட்டது. புதிய தொழில்நுட்பத்தின் கீழ் புதிதாக தொடங்கப்பட்ட நிலையமாக இது இருப்பதனால் ஆரம்ப காலத்தில் நடைமுறைசார்ந்த தொழில்நுட்ப அறிவு இல்லாமையால், இனப்பெருக்க நிலையத்திற்குவழங்கப்பட்ட உற்பத்தி இலக்குகளை அடைய முடியவில்லை. | இனவிருத்தி நிலை யத்தின் ஆரம்ப நிர்மாணப் பணிகளை முடித்து, புதிய தொழில்நுட்ப பயன்பாடு தொடர்பில் சாத்தியவள ஆய்வை மேற்கொண்டு,அதனை ஆரம்ப திட்டத்தில் உள்ளடக்குதல் வேண்டும். உரிய இலக்குகளை முறை யாக அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடி க்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) 2018 யூலை 13 ஆந் திகதி ரூபா 42,572,925 ஆன போலியான பிணைமுறி ஒன்றைப் பெற்று முற்பணம் வழங்கப்பட்டிருந்தமை தொடர்பில் செயற்பட்டிருந்த உத்தியோகத்தர் களிற்கு எதிராக தாபனவிதிக் கோவையின் IIஆம் தொகுதியின் XXVIIIஆம் அத்தியாயத்தின் படி ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு உயர்மட்ட முகாமை | இது தொடர்பில் அதிகார சபையால் விசாரணை மேற்கொள்ளப்பட்டதுடன் மேலதிக விசாரணை மேற் கொள்ளப்பட வேண்டியிருப்ப தனால் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அமைச் சினால் வழங்கப்படுகின்ற தீர்மானத்தின் அடிப்படையில் | போலியான பிணைமுறி மீது முற்பணம் வழங்கப்பட்டிருந்தமை தொடர்பில் செயற்பட்டிருந்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக தாபனவிதிக் கோவையின் IIஆம் |

| | | |
|---|---|---|
| த்துவம் நடவடிக்கை எடுக்காதிருந் ததுடன், அந்த வழங்குனருக்கு எதிராக எவ்வித சட்ட ரீதியான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.<br><br>இந்தக் கம்பனி தற்போது தவறியோர் பட்டியலில் சேர்க் கப்பட்டுள்ளது. அத்துடன், இந்தக் கம்பனியால் வழங்க ப்பட்டிருந்த செயலாற்றல் பிணைமுறி இலிருந்து எமக்கு செலவான தொகை க்கு மேலதிகமாக இந்த இயந்திரத்தை கொள்வனவு செய்ய முடியாது போன மையால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பையும் கணிப்பிட்டு அத்தொகையும் கழித்துக் கொள்ளப்பட்டது என்பதை அறியத்தருகின் றேன். | தொகுதியின் படி ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**3.2 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 மே 25 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த வெலிகந்த இனவிருத்தி நிர்மாணச் செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2020 செப்தெம்பர் 15 முதல் இடைநிறுத்தப்பட்டி ருந்தமை காரணமாக அதற்காக செலவிடப்பட்டுள்ள ரூபா 158,487,599 தொகை பயனற்ற செலவினமாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. | இந்த நிர்மாண ஒப்பந்தத்தை முடிவுறுத்துகையில் (Termination Bill) தாமதக் கட்டணமாக ரூபா 7,196,563.45தொகையும் பிடித்துவைத்தல் காசாக ரூபா 7,181,872.77தொகையும் முடிவுறுத்தல் பட்டியலில் இருந்து கழிக்கப்பட்டுள்ளது.<br><br>13.8.1 மற்றும் 13.8.2 உருப்படிகள் முடிக்கப்பட்டு தற்போது நிலையத்தால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும்,ஒப்பந்தக்காரரா ல் பட்டியல் மூலம் அப்பெறுமதி கோரப்படவில்லை.<br><br>அதன்படி, இது தொடர்பாக நடுவர்தீர்ப்பு(adjuration)மற் றும் பிணைமுறி தொடர்பான வழக்கு மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் | ஒப்பந்த காரருக்கு நீண்ட காலத்திற்கு கால நீடிப்பு வழங்கப்பட்ட பின்னரும் குறிப்பிடத்தக்க கிரயம் மேற்கொள்ளப்பட்ட பின்னரும் ஏற்படத்தக்க நட்டத்தை குறைத்துக் கொள்வதற்காக இடை நடுவே செய்திட்டத்தை கைவிடாதிருக்க முகாமைத்துவம் இயன்றளவு உச்சகட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

உள்ளதால்,அந்த வழக்கின் தீர்ப்புக்கு அமையவும் நடுவர் தீர்ப்புக்கு அமையவும் மேற்கண்ட ரூபா14 மில்லியனில் இருந்து நிலுவைத் தொகையை கழித்துவிட்டு மீதமுள்ள தொகையை ஒப்பந்ததாரருக்கு வழங்குவோம் என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3.3 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இங்கினியாகல 05 நீர் உயிரின வளர்ப்பு குளங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 30,112,800 ஒப்பந்த பெறுமதி சார்பாக ரூபா 4,000,000 முன்பண பிணைமுறியும் ரூபா 1,806,768 செயலாற்றல் பிணைமுறியும் சமர்ப்பிக்கப்பட்டு 06 மாதங்கள் கடந்த பின்னர், அவை மோசடியான பிணைமுறிகள் என்பது கண்டறியப்பட்டது. அதன் பின்னர் வங்கியால் மீண்டும் பிணைமுறிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2021 பெப்ரவரி 18 ஆந் திகதி வரையிலும் மோசடி பிணைமுறிகளை வழங்கிய நிறுவனத்தின் மீது அதிகாரசபை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையிடம் (CIDA) முறைப்பாடு கூட செய்திருக்கவில்லை. | செயலாற்றல் உத்தரவாதங்களையும் முற்பண பிணை முறிகளையும் உறுதிப்படுத்துவதற்கான சுற்றறிக்கைகள் அக்காலம் வரை வெளியிடப்பட்டிருக்காமையால் அத்தகைய உறுதிப்படுத்தல் எதுவும் பெற்றுக் கொள்ளப்படவில்லை ஒப்புக்கொள்கிறேன்.இருப்பினும்,குறித்த பிணை முறிகளின் காலத்தை நீடிப்புச் செய்கையில் அவை மோசடியா னவை என்பது தொடர்பில் வங்கிக்கு அறிவிக்கப்பட் டிருந்ததுடன்,இந்த வழக்கை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையும் கோரப் பட்டது. சம்பந்தப்பட்ட பிணைமுறிகளில் மோசடி இடம்பெற்றுள்ளதாக வங்கிக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வங்கி மீண்டும் பிணைமுறிகளை வழங்கியது. | பிணை முறிகளின் சரியான தன்மையினையும் ஏற்றுக்கொள்ளப்படு தன்மையையும் ஒப்பந்தத்தின் ஆரம்பத்திலேயே அதிகாரசபையால் உறுதி ப்படுத்திக் கொள்ள வேண்டும்.<br><br>மோசடியாக பிணை முறிகள் சமர்ப்பித்திருந்தமை தொடர்பில் CIDA நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்து குறித்த ஒப்பந்த காரரை தவறியோர் பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2016 மார்ச் 01 ஆந் திகதிய 2016 956/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட விடத்தல்தீவு பாதுகாப்புப் பிரதேசம் உள்ளிட்ட 1491 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ள உத்தேச நீரியல் உயிரின வளர்ப்பு நிர்மாணச் செயற்திட்டம், நாரா நிறுவனத்தின் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையின் படி நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழுவால் நிராகரிக்கப்பட்டு 165 ஹெக்டயார் மாத்திரம் விடுவிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்தது. முறையான கண்காணிப்பின்றி இயற்கை வனப்பிரதேசத் திலுள்ள 1491 ஹெக்டயர் நிலப்பகுதியை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்திட்டத்தின் திட்டவரைவு, உற்பத்தி திட்டங்கள், மதியுரைச் சேவைகள் மற்றும் நில அளவீட்டு நடவடிக்கைளிற்காக செலவிடப்பட்டுள்ள ரூபா 19,442,652 தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது. | அமைச்சரவை தீர்மானத்தின் படி Environmental Assessment Studyமேற் கொள்ளப்பட வேண்டியிருந் தமையால் அந்த ஆய்வு நாரா நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த ஆய்வுக்கான கட்டணம் நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் செலுத்தப்பட்டுள்ளது. | உத்தேச நீரியல் உயிரின வளர்ப்பு நிர்மாணச் செயற்திட்டத்திற்கான காணியை ஒதுக்கும் போதும் செயற்திட்ட நிர்மாண நடவடிக்கைகளின் போதும் தேவையான அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) அமைச்சின் மானியத்தின் மூலம்ரூபா190 மில்லியன் செலவிடப்பட்டு 2017 ஆம் ஆண்டில் ரெக்கவ நண்டு வளர்ப்புச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும்,போதுமான உவர்ப்புத் தன்மை கிடைக்காமையால் செயற்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளான நண்டு வளர்ப்புத் திட்டத்தை செயல்படுத்த முடிந்திருக்கவில்லை. செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் முறையான சாத்தியவள ஆய்வுக் மேற்கொள்ளப்பட்டிருக்காமையே இதற்கான காரண மாகும். அவ்வாறே நிதிப் பிரமாணம் 3(ஆ) III பிரகாரம் அடிப்படைக் கிரயம் ரூபா 100 மில்லியன் இற்கு மேற்பட்ட செயற்திட்டங்களிற்கு பிரத்தியேகமாக அதாவது அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது மாத்திரம் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | தேசிய திட்டமிடல் செயற்திட்டங்களை சமர்ப்பித்தல் படிவம் இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் ஊடாக மேற்படி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு பெற்றுக் கொள்ளப்பட்டது டன், இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் மேற்படி செயற்திட்டத்திற்காக பெறப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் முறையான சாத்தியவள ஆய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்காக உரிய அங்கீகாரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். |

(ஈ) மேற்படி செயற்திட்டம் வெற்றியடைந் திருக்காமையால் செயற்திட்ட குறிக் கோள் மாற்றியமைக்கப்பட்டு அந்த செயற்திட்டத்திற்காக காணிகளை வழங்கியிருந்த தனிப்பட்ட காணி உரிமையாளர்களிற்கும் அதிகார சபைக்கும் இடையே முற்தரப்பு குத்தகை உடன்படிக்கை ஒன்று 2021 திசெம்பர் 02 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டு உவர்நீர் இறால் வளர்ப்பு உடன்பாட்டிற்கு வந்திருந்த போதிலும், தனியார் முதலீட்டுடன் நேரடியாக கடப்பாடுகளை ஏற்படுத்து கையில் பின்பற்ற வேண்டிய தனியார் மற்றும் அரசாங்க முதலீட்டுச் செயற்திட்டத்திற்கான கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 23 ஆவது குறைநிரப்பின் படி செயற்பட்டிருக்க வில்லை.

ரெகவ நண்டு வளர்ப்புச் சங்கத்தின் காணி உரிமையாளர்களிற்கும் அதிகாரசபைக்கும் இடையே 2017 மே 19 ஆந் திகதி முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் அவர்கள் Crab cityசெயற்திட்டத்தின் எந்வொரு இடத்திலும் அவர்களிற்கு என ஒதுக்கப்படுகின்ற நிலத்தின் உரிமையை பெற்றுக் கொள்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ள னர்.

தனியார் மற்றும் அரசாங்க முதலீட்டுச் செயற்திட்டத்திற்கான கொள்வனவு வழிகாட்டல்களின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.